# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தம்)

**2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும்
தொழிற் கல்வி அமைச்சர் அவர்களால்
2026 மே மாதம் 06 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது

(2026 ஏப்பிறல் மாதம் 23 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)

பாராளுமன்றத்தால் அச்சிடப் பணிக்கப்பட்டது

[61 ஆம் சட்டமூலம்]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

விலை : ரூபா 30.00 தபாற் செலவு : ரூபா 150.00

இச்சட்டமூலத்தை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

சட்டப்பயன் பற்றிய கூற்று

**வாசகம் 2** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை நீக்குகின்றது என்பதுடன் சட்டப்பயனானது –

(அ) தொலைத்தொடர்பு சேவைகள் வழங்குநருக்கு முதன்மைச் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடையாந்தன்மையை விரிவுபடுத்துதலுமாகும்; அத்துடன்

(ஆ) முதன்மைச் சட்டவாக்கத்துக்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள காலப்பகுதிகளுடன் தொடர்புடைய தொலைத்தொடர்பு சேவைகளைப் பெறுகின்ற ஆட்களிடமிருந்து விதிக்கப்படவேண்டிய தொலைத்தொடர்பு அறவீட்டின் வீதத்தைக் குறித்துரைத்தலுமாகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன், ஏதேனும் காலப்பகுதியின் போது இலங்கைத் தொலைத்தொடர்பாடல்கள் ஒழுங்குப்படுத்தும் ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்படவேண்டிய அறவீட்டுத் தொகையிலிருந்து ஏதேனும் அறவிடமுடியாத தனிசைக் கழிப்பதற்கு தொலைத்தொடர்பாடல் சேவைகளின் இயக்குநர்களையும் வழங்குநர்களையும் இயலச்செய்வதுமாகும்.

**வாசகம் 4** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப்பயன், "வழங்குநர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தினால் அப்பிரிவுக்கு புதிய வரைவிலக்கணமொன்றை அறிமுகப்படுத்துகின்றதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

**வாசகம் 7** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்துக்கு அட்டவணையொன்றை உட்புகுத்துகின்றது என்பதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்துக்கு விளைவாந்தன்மையினதுமாகும்.

ச.வ.– ஓ. 74/2025

## 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்

**2.** (இதனகத்துப்பின்னர் “முதன்மைச் சட்டவாக்கம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2011 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, தொலைத்தொடர்பு அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“தொலைத் தொடர்பு அறவீட்டின் விதிப்பனவு

**2.** ஒவ்வொரு மாதம் தொடர்பிலும் தொலைத்தொடர்பு சேவைகள் கிடைக்கப் பெறுவதன்மேல் எவரேனும் இயக்குநரால் அல்லது வழங்குநரால் அளிக்கப்படும் அத்தகைய தொலைத்தொடர்பு சேவைகள் வழங்கலின் பெறுமதியின்மீது இதற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வீதத்தில் (இதனகத்துப்பின்னர் “அறவீடு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) தொலைத்தொடர்பு அறவீடு என அழைக் கப்படும் அறவீடொன்று ஏதேனும் தொலைத்தொடர்பு சேவையைப் பெறும் ஒவ்வோராளிடமிருந்தும் அறவிடப்படுதலும் விதிப்பனவு செய்யப்படுதலும் வேண்டும்:

ஆயினும், எந்த ஒழுங்கமைப்பிற்கு அல்லது தனியாளுக்கு 1996 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, இராஜதந்திர சிறப்புரிமைகள் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாகின்றனவோ அந்த

PL15764 - 172 (2026/05)

ஏதேனும் ஒழுங்கமைப்பு அல்லது எவரேனும் தனியாள் மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட அறவீட்டை செலுத்துமாறு தேவைப்படுத்தப் படுதலாகாது.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (1) ஆம் உட்பிரிவாக அப்பிரிவை மீளிலக்க மிடுவதன்மூலமும்;

(2) அதன் மீளிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவில், “1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கை தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட இயக்குநர்களால் சேகரிக்கப்பட்டு 2011 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஒவ்வொரு மாதத்தின் முடிவிலிருந்தும் பதினைந்து நாட்களுக்குள் மேற்கூறப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்கு (இதனகத்துப் பின்னர் “ஆணைக்குழு” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) ஆணைக்குழுவால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய விவரங்களுடன் சேர்த்து செலுத்தப்படுதல் வேண்டும்:” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாகப் பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:-

“இயக்குநர்களால் அல்லது வழங்குநர் களால் சேகரிக்கப்பட்டு (இதனகத்துப் பின்னர் “ஆணைக்குழு” எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட இலங்கைத் தொலைத்தொடர்புகள்

ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்படுதல் வேண்டும்:"; அத்துடன்

(3) அதன் மீளிலக்கமிடப்பட்ட (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவாக இலக்கமிடப்படவேண்டிய பின்வரும் உட் பிரிவைச் சேர்ப்பதன் மூலமும்:-

"(2) இத் (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது தொடங்கும் தேதிக்குப் பின்னரான காலப்பகுதியொன்றுக்காக (1) ஆம் உட்பிரிவின்கீழ் இயக்குநரினால் அல்லது வழங்குநரினால் ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்படற்பாலதான அறவீட்டுத்தொகை நிச்சயித்தலில், அறவீட்டுத் தொகையொன்று முன்னரான காலப்பகுதியொன்றில் ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்பட்டதாக விருக்கின்ற அக்காலத்தின் போது அத்தகைய எவ் இயக்குநரால் அல்லது வழங்குநரால் அறவிடமுடியாத தனிசொன்றாக வருகின்றதோ அவ் இயக்குநரால் அல்லது வழங்குநரால் உறப்பட்ட ஏதேனும் அறவிட முடியாத தனிசுக்குச் சமமான தொகையொன்று கழிப்பனவு செய்யப்படுதல் வேண்டும்:

ஆயின், இவ்வுட்பிரிவின்கீழ் முன்னரே கழிப்பனவு செய்யப்பட்ட தொகையொன்றின் கணக்கின் மீது அவ் இயக்குநரால் அல்லது வழங்குநரால் ஏதேனும் காலப்பகுதியில் சேகரிக்கப்பட்ட ஏதேனும் பணத்தொகை எக்காலப்பகுதியில் அப்பணத்தொகை சேகரிக்கப்படுகின்றதோ அக்காலப்பகுதிக்காக ஆணைக்குழுவுக்குச் செலுத்தப்பட்ட தொகையில் உள்ளடக் கப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவு, "இயக்குநர்" என்னும் சொல் அப்பிரிவில் எங்கெல்லாம் தோன்றுகின்றதோ அச்சொல்லுக்குப் பதிலாக, "இயக்குநர் அல்லது வழங்குநர்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு, "இயக்குநர்" என்னும் சொல் அப்பிரிவில் எங்கெல்லாம் தோன்றுகின்றதோ அச்சொல்லுக்குப் பதிலாக, "இயக்குநர் அல்லது வழங்குநர்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துதல்

**6.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) "தொலைத்தொடர்பு சேவை" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தில், "1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தின் 17 ஆம் பிரிவின்கீழ் உரிமமளிக்கப்பட்ட தொலைத் தொடர்பு மற்றும் ஏனைய இயக்குநர்களால்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இயக்குநர்களினாலும் வழங்குநர்களினாலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) "இயக்குநர்" என்னும் சொல்லமைப்பின் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் வரைவிலக்கணத்தைச் சேர்ப்பதன் மூலமும்:-

> ""வழங்குநர்" 1991 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, இலங்கைத் தொலைத்தொடர்புகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதற்குக் குறித் தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் அட்டவணையை உட்புகுத்துதல்

**7.** பின்வரும் அட்டவணை முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்னர் இத்தால் உட்புகுத் தப்படுகின்றது:-

**“அட்டவணை**

[பிரிவு 2]

| | நிரல் I<br>தொலைத்தொடர்பாடல் சேவையின் வகை | நிரல் II<br>சதவீதம் |
|---|---|---|
| 1. | 2011, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஆனால் 2013, சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னரான காலப்பகுதிக்கான தொலைத்தெடர்பாடல் சேவைகள்; | 20 % |
| 2. | பின்வருவனவற்றுக்கான இணையச் சேவைகள் – | |
| | (அ) 2013, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஆனால் 2017, செத்தெம்பர் 1 ஆம் தேதிக்கு முன்னரான காலப்பகுதிக்கானது; | 10 % |
| | (ஆ) 2017, செத்தெம்பர் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் காலப்பகுதிக்கானது; | 0 % |
| 3. | பின்வருவனவற்றுக்கான இணையச் சேவைகள் தவிர்ந்த தொலைத்தொடர்பாடல் சேவைகள்:- | |
| | (அ) 2013, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஆனால் 2014 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னரான காலப்பகுதிக்கானது; | 20 % |
| | (ஆ) 2014, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஆனால் 2018, நவம்பர் 10 ஆம் தேதிக்கு முன்னரான காலப்பகுதிக்கானது; | 25 % |
| | (இ) 2018, நவம்பர் 10 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஆனால் 2019 திசெம்பர் 1 ஆம் தேதிக்கு முன்னரான காலப்பகுதிக்கானது; | 15 % |
| | (ஈ) 2019, திசெம்பர் 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஆனால் 2022 யூன் 4 ஆம் தேதிக்கு முன்னரான காலப்பகுதிக்கானது; | 11.25 % |
| | (உ) 2022 யூன் 4 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் காலப்பகுதிக்கானது; | 15 % .”. |

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

**8.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் த்ணைக்களத்தில் பத்ப்பிக்கப்பெற்றது